பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (18-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 266

# வடபகுதிக்கு வரும் கப்பல்களுக்கு மீண்டும் செஞ்சிலுவை பாதுகாப்பு!

## தற்காலிக ஏற்பாடாம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 18

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வடக்கே ஏற்றிவரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியை மீண்டும் ஆரம்பிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

வடக்கில் உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலையை கவனத்தில் எடுத்து, இடைநிறுத்தியிருந்த தமது பணியை மனிதாபிமான உணர்வுடன் மீண்டும் தற்காலிகமாக ஆரம்பிக்க செஞ்சிலுவைக் குழுவினர் முன்வந்திருக்கின்றனர்.

குடாநாட்டின் அவசர தேவையைக் கருத்தில் கொண்டு — மனிதாபிமான அடிப்படையில் — இந்த முடிவை தாங்கள் எடுத்துள்ளதாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. ஜோர்ஜ் குன்ஸ் நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா முடித கப்பலுக்கு பாதுகாப்பு வழங்க மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியை மீண்டும் ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்திருக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு —

குடாநாட்டுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியுள்ள "லங்கா முடித" கப்பலுக்கு பாதுகாப்பு வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி வந்த இக்கப்பலில் இருந்த ஒரு தொகுதி பொருள்கள் காங்கேசன்துறையில் செஞ்சிலுவையினரின் அனுமதியின்றி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானத்தளம் மீது குண்டு வீச்சாம்

கொழும்பு, ஓக. 18

இரணமடுவில் விடுதலைப் புலிகளின் விமானத்தளம் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பகுதியில் ஸ்ரீலங்கா விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி இருப்பதாகவும் —

சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையிலான பகுதி சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [இ-3-6]

## படையினர் பிடித்த பகுதி இன்னும் அவர்களிடமே!

### சரத்முனசிங்க கூறுகிறார்

கடந்த மாதம் படையினர் மேற்கொண்ட "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை மூலம் புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றிய 78 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதிகள் தொடர்ந்து இராணுவத்தின் வசமே இருக்கின்றன.

இராணுவ அறிவிப்பாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்று மீண்டும் இப்படி வலியுறுத்திக் கூறினார்.

கூடிய விரைவில் புதிய யுக்திகளை கையாள்வதன் மூலம் புலிப் போராளிகளை நிர்மூலமாக்கும் திட்டங்களை இராணுவம் வடிவமைக்க தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-3)

## வடமராட்சி கடலில் மீனவர் ஒருவர் பலி மற்றொருவர் காணாமற் போய்விட்டார்

### கடற்படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல்

வடமராட்சி, ஓக. 18

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா கடற்படையினர் நடத்திய பீரங்கி, ஷெல் தாக்குதல்களில் ஒரு மீனவர் கொல்லப்பட்டார். மற்றொரு மீனவர் காணாமல் போய்விட்டார்.

நேற்றுக் காலை 5.00 மணியளவில் வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்துக்கு காங்கேசன்துறையிலிருந்து இரு டோறா படகுகளில் வந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியார் மத்தியஸ்தம் ஏற்க அரசு மறுப்பு!

### புலிகளுடன் யுத்தம் தொடரும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 18

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் வெளியார் மத்தியஸ்தத்தை அரசு ஏற்றுக்கொள்ள மாட்டாது. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தொடரும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை அரசு புலிகளுடன் இனி எவ்வித பேச்சுவார்த்தைகளையும் நடத்தப்போவதில்லை. இனப்போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்து முகமாக புலிகள் மீது இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும்.

இனி புலிகளுடன் அமைதிப் பேச்சு வார்த்தைக்கு வழி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இலகுவான காரியம் அல்ல என்கிறார் முனசிங்க

கொழும்பு, ஓக. 18

"பல்லாயிரக்கணக்கான சிப்பாய்களை எதிரியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குள் கொண்டுசெல்வது இலகுவான காரியம் அல்ல"

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்களை கொண்டுசெல்ல திட்டமிடப்பட வேண்டும் என்றும்—

அத்திட்டத்தை முறைப்படி செயற்படுத்தத் தேவைப்படும் சாதனங்கள் அனைத்தும் பெறப்பட்ட பின்னரே யுத்தம் ஆரம்பிக்கப்படும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-6)

## தப்பியவர்களில் இதுவரை 12 பேர் பிடிபட்டனராம்

வேலூர் சிறைச் சாலையில் இருந்து தப்பிய விடுதலைப் புலிப் போராளிகள் 43 பேரில் இதுவரை 12 பேர் மட்டும் பிடிபட்டுள்ளனர் என்றும்—

மீதமுள்ள போராளிகளை தேடும் வேலைகள் நடைபெறுவதாகவும்— அறிவிக்கப்பட்டுள்ளது—

தப்பி ஓடிய போராளிகளின் படங்கள் அடங்கிய போஸ்டர்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. இதற்கிடையில் தப்பியவர்களில் மற்றும் ஒருவரை நேற்று கைது செய்ததாக தமிழ் நாடு பொலீஸார் தெரிவித்தனர். [இ-3]

## கைதிகள் பிடிபட்ட பின்பே சிறைஉடைப்பு தெரியவந்தது

லண்டன், ஓக. 18

வேலூர் சிறையில் இருந்து கைதிகள் தப்பிய விடயம் தற்செயலாகவே சிறை அதிகாரிகளுக்கு தெரியவந்ததாம்.

பி.பி.ஸி. மேற்கண்டவாறு தகவலை தெரிவித்தது.

சுதந்திர தினத்துக்கு முன் தினம் சென்னையில் கேடிகள் என்று சிலரை பொலீஸார் கைது செய்த சமயம் தான் அவர்கள் வேலூரில் சிறையில் இருந்து தப்பிவந்தவர்கள் என்பதும்—

அங்கு சிறைஉடைப்பு நடந்துள்ளது என்பதும்— தெரியவந்தது என்று தெரிவிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைத் தாளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக என்றுமில்லாதவாறு விலையும் மிக உயர்ந்துள்ளது.

இதற்கு முன் வரும் பல தடவைகள் இது போன்ற நெருக்கடிகளை நாம் எதிர்கொள்ள நேர்ந்ததை நீங்கள் அறிவீர்கள்.

அப்போதெல்லாம் எம் மண்ணில் வாழும் மக்களின் கஷ்டம் உணர்ந்து, அந்தப் பளுக்களை நாமே தாங்கிக் கொண்டோம்.

இம்முறை எமது சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில், சரியாக நான்கு வருடங்களுக்குப் பின்னர் —

உதயனின் விலையை ஒரு ரூபாவால் உயர்த்த வேண்டியதாயிற்று.

நாளை மறுதினம் 20 ஆம் திகதி முதல் உங்கள் உதயனின் விலை 6 ரூபாவாகும்.

எங்கள் நிலைமை அறிந்து இச்சிறு அதிகரிப்பை பொறுத்தருள வேண்டுகிறோம்.

— நிர்வாகத்தினர்

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



மறைவு:
**09 - 07 - 1995**

## அமரர் ந. சித்திரபாலு
## திருமதி சி. நாகேஸ்வரி

இவர்களுடன் 09 - 07 - 1995 அன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் புக்காரா குண்டுவீச்சினால் அகாலமரணமடைந்த

சி. ஐயமதி (மகள்)
சி. மகேந்திரன் (மகன்)
திருமதி ம. வசந்தகுமாரி (மருமகள்)
திருமதி கோ மதிவதனா (மகள்)
கோபாலகிருஷ்ணன் (மருமகன்)
கோ. பிரதீபா } பேரப்பிள்ளைகள்
கோ. குஜந்தன் }
சி. பிரபாகரன் (மகன்)
சி. தனேகஸ்வரி (மகள்)
சி. ஜெயபாலினி (மகள்)
பு. சஜந்தன் (பேரன்)
க. நல்லையா (மைத்துனர்)
திருமதி ந. லீலாவதி (திருமதி நாகேஸ்வரியின் சகோதரி)

ஆகியோரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [18 - 08 - 95] வெள்ளிக்கிழமை சுழிபுரம் மேற்கு ஐயனார் கோயிலடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவர்களின் பிரிவால் துயருறும்;
மகன், மருமகன், சகோதரிகள்,
மைத்துனர்மார், பேரப்பிள்ளைகள்.

தகவல்;
புண்ணியமூர்த்தி குடும்பத்தினர்,
மன்னார். [38063]

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்; 19 — 04 — 1935



விண்ணில்: 19 — 07 — 1995

## திருமதி அறுக்காஞ்சி மாகிறேற்

அணையா விளக்கே எம் ஆருயிர் அம்மா!
துணையின்றி எம்மை நீயும் தவிக்கவிட்டாயோ
சுமை இந்த உலகென்று நீள்துயில் கொண்டாயோ
இமை விழிகள் கசிந்தோட நின்பிரிவால்
துவண்டோம்.

ஆறுதல் எமக்கில்லை
ஆதரவெமக்கில்லை
ஆயினும் நீ
எம்மை விட்டு
ஆறுதல் கொண்டாயோ?
அம்மா! உன் ஆன்மா சாந்திபெறுக.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

சேர்ச் றோட்,
சமிகாணை. (38084)

## கல்விக்கழக ஆசிரியர்கள் நிதியுதவி

யாழ்ப்பாணம், ஓக. 18

தமிழீழ பாதுகாப்பு நிதிக்கு கல்விக்கழக ஆசிரியர்கள் தமது ஆடி மாத உதவு தொகையினை முழுமையாக வழங்க முன்வந்துள்ளனர்.

இவர்களின் இதற்கான உதவுதொகைப் படிவங்களை கோட்ட ரீதியாக பெற்று கல்விக்கழக நடுவப்பணியகத்திற்கு சேர்ப்பிக்குமாறும் ஆவணி மாத உதவுதொகை சகல கல்விக் கோட்டங்களுக்கும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வழங்கப்படுமென கல்விக் கழகப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## நல்லூருக்கு பாதயாத்திரை

கொழும்புத்துறை, ஓக. 18

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கம் வருடந்தோறும் நடத்தும் நல்லூர் கந்தசுவாமி கோயில் பாதயாத்திரை வழமை போல் இவ்வருடமும் நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாதர் சிவன் கோயிலில் இருந்து இப் பாதயாத்திரை ஆரம்பமாகும்

## புலிகளின் குரல் வானொலியில்

**18 — 08 — 1995**

**வெள்ளி இரவு**

★ 8-02 — கலைமஞ்சரி— மட்டு. அம்பாறை சிறப்புப்படையணியும் நிதர்சனமும் இணைந்து தயாரித்த ''உறங்காத கண்மணிகள்'' வீடியோ திரைப்படம் அறிமுகம் — அடுத்து சிறுகதை — திருமதி. சாவித்திரி அத்துவிதானந்தன் எழுதிய 'அந்தத் தகுதி எனக்கில்லை' தொடர்ந்து கவிதை— திருமலை ச. ஜேசு எழுதிய ''வைகறைப் பொழுதுவரை காத்திருப்போம்''
★ 8-20 — கணப்பொழுது — இ. கண்ணம்மா எழுதிய '2ஆம் லெப்ரினன்ட் சியாமணி'
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய 'வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் இருந்து எட்டிப் பார்ப்பவர்கள்'
★ 8-50 — சிறப்பு நிகழ்ச்சி — ஏகலைவன் எழுதிய 'சுதந்திரத் தளபதி சுபாஸ் சந்திர போஷ்'

**19 — 08 — 1995**

**சனி காலை**

★ 7-02— மாவீரர் வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**வெள்ளி மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-03 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — கணநேரக்காவியங்கள்
★ 5-30 —மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45 — நாடகம்
★ 6-00 — சிந்தனைக்கும் சில விநாடிகள்
★ 6-02 — வெற்றிச் சுவடுகள்
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

# நெல் பயிரிட தயாராகும் வலி.மேற்கு விவசாயிகள்

வட்டுக்கோட்டை, ஓக. 18

வலி. மேற்கு பகுதி வயல்களில் நெற்செய்கைக்கான ஆயத்த வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருவதை காண முடிகிறது.

அராலி, வட்டுக்கோட்டை சங்கானை பகுதிகளில் வயல்களுக்கு பசளையிடல், ஏற்றிப்பரவுதல் மற்றும் உழவு வேலைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையினால் இப் பகுதிகளில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும் விவசாயிகள் பெரும்போக நெற் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடத் தயாராகி வருகின்றனர். (க-161)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 18-01-1928 இறைவனடியில் 20-07-1995

சுலனாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட
திருமதி
## அருளானந்தம் அமலஉற்பவம்

நாளை சனிக்கிழமை (19 8-95) காலை 6 30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் நினைவுத் திருப்பலியில் கலந்து கொண்டு சிறப்பிப்பதோடு அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வகையிலும் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
சகோதரர்கள்.

579/2, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (38088)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 23 — 10 — 1922



மறைவு: 19 — 07 — 1995

அமரர்
## சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அன்பால், பண்பால், அறிவால் எம்மை வழி நடத்தி வாழ்வூட்டிய எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து 31நாட்கள் கடந்தாலும் அவரின் பாச நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலா.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வகைகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (18-08-95) வெள்ளிக்கிழமை 11மணிக்கு எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி: இராசம்மா,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கே. கே. எஸ், வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (8641)

வடமாகாண
பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்
உயர்திரு. ச. சடாட்சரநாதன்
அவர்களின்

## சேவைநலன் பாராட்டு

(18 - 08 - 1995)



10-12-1954இல் உதவி அஞ்சல் அதிபராக அஞ்சல் திணைக்களத்தில் இணைந்து கொண்டு கடந்த நாற்பத்தொரு வருடங்களாக உதவி அஞ்சல் அதிபர், பொறுப்பு அஞ்சல் அதிபர், பிரதம அஞ்சல் அதிபர், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், மாகாண அஞ்சல் அத்தியட்சகர், சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர், பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என பல்வேறு உயர் பதவிகளில் தமது முழு நேரத்தையும் சேவை மனப்பாங்குடன் அஞ்சல் திணைக்களத்திற்கும், பொதுமக்களுக்கும் அர்ப்பணித்து தனது அரிய சேவையை அவரது அறுபதாவது வயதில் (20-08-95) பூர்த்தி செய்கின்ற இவ்வேளையில்,

அவரின் நிர்வாக ஆளுமை திறனையும், தன்னல மற்ற மனப்பாங்கையும், இன்முகம் காட்டும் இனிய சுபாவத்தையும், மலை போல் உயர்ந்து நிற்கும் நேர்மையுடனான பண்பையும் ஒருமிக்க தனக்குள் கூட்டி கடமையே கண்ணாக கருத்திற் கொண்டு எம்மையும் எமது திணைக்களத்தையும் நெறிப்படுத்திய பண்புக்கும், பாசத்திற்கும் இலக்கணமாக திகழ்ந்த உயர்திரு ச. சடாட்சரநாதன் அவர்களின் ஓய்வுகாலம் சீரும் சிறப்போடும் இனிதே அமைய நீடூழி வாழ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்;
பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்களும் மற்றும்
அஞ்சல் உத்தியோகத்தர்கள்,
ஊழியர்களும்,
வடமாகாணம்

(38076)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 08 — 01 — 1931

இறைவன் அடியில்: 19 — 07 — 1995

திருமதி
### பரமேஸ்வரி இராசையா
(இளைப்பாறிய ஆசிரியை)

அன்னா யுனையெண்ணி நாமழுகின்றோ மனுதினமும்
என்னே எமைவிட்டு சென்றிட நீயு மெண்ணியதேன்
பொன்னே! மணியே! புவியே! யென
நாமழைத்தழைத்துச்
சொன்னே புலம்பிட வைத்து நீ சென்றவகையுரையே
அம்மா! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— கணவனும், பிள்ளைகளும்.

உசன், மிருசுவில்.

[38030]

# அறிவியல் செய்முறை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 18

மாணவர் அறிவியல் கழகம் கரும்புலிகளின் நாளை முன்னிட்டு ஆண்டு 10 மாணவர்களிடையே நடத்திய அறிவியல் (விஞ்ஞானம்) செய்முறைப் போட்டியின் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

—தமிழீழத்தில் இளம் புதிய கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் நோக்கில் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையில் இருந்து உருவாக்கம் பெற்ற மாணவர் அறிவியல் கழகம் தனது செயற்பாடுகளில் ஒன்றாக இப்போட்டியை நடத்தியது.

போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

ம பிரவீணன் — யூனியன் கல்லூரி, வை. தயாபவன்— இடைக்காடு ம. வி., மு நிவேதினி— வட்டு. இந்துக் கல்லூரி, யோ. சிவயோகராஜன்— சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி, பொ பவிதா— மானிப்பாய மகளிர் வித்தியாலயம்.

—இப்போட்டியில் கோட்ட மட்டத்தில் 70 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். இவர்களின் புள்ளிகளை அறிவியல் கழகத்தில் பார்வையிடலாம். (ஐ)

## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக. 18

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் 18 ஆம் நாள் திருவிழாவான இன்றைய தினம், ஆலயச் சூழலில் நடைபெற உள்ள நிகழ்ச்சிகள்;-

★ நாவலர் மணி மண்டப முன்றலில்—
மாலை 6 மணி — 7 மணி வரை சுவர்ணலதா கைலாயநாதன் பாட்டு.
மாலை 7 மணி — 8-30 மணி வரை திரு ஆர். ராதாகிருஷ்ணன் குழுவினரின் இருவயலினிசை.

★ நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் —
பிற்பகல் 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை— திருமந்திரம்.

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—
மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் "விஷ்ணு பாகவதம்" தொடர் இசைப் பேருரையில் "சகுந்தலை"

[எ-30-111]

## அதிபர்கள் ஆசிரியருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம். ஒக 18

உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான தமிழீழ பாதுகாப்பு நிதியம் பற்றிய கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் மு. ப. 9-00 மணிக்கு உடுவில், தெல்லிப்பளை அதிபர்கள், ஆசிரியர்களையும் மு. ப. 11-00 மணிக்கு சண்டிலிப்பாய், சங்கானை அதிபர்கள், ஆசிரியர்களையும் தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தரும் வண்ணம் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் கேட்டுள்ளார். இதில் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி கருத்துரை வழங்குவார். (ஓ)

## கௌரவிப்பு

மீசாலை கிழக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தான உற்சவ காலத்தின் போது "கந்தபுராணம்" தொடர் விரிவுரை நிகழ்த்திய சைவப்புலவர் க. கமலநாதன் "சிவச்செல்வன்" என்னும் பட்டம் சூட்டி அருட்கவி விநாசித்தம்பியால் பாராட்டப்பட்டார். (ஓ-31)

## 41-ம் நாள் இதய அஞ்சலி

(18 - 08 - 1995)



### செல்வன் செல்வராசா பிரதீஸ்
(பிரசாத்)

அன்னை மடியில் : 19 - 01 - 1979
அரக்கன் அழிப்பில்: 09 - 07 - 1995

செல்வராசா சந்திரா தம்பதியர் செல்வமகன் "பிரதீஸ்" எனும் பெயரான் உறவினரை, நண்பர்களை எல்லையில்லாக் கவலை வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டு எதிரிகளின் குண்டு வீச்சினால் எங்கு சென்றாய்? தேடுகிறோம் தேடுகிறோம் பிரசாத்தை. இந்நாளில் உமது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டும்;

அன்புப் பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நவாலி,
மானிப்பாய்.

(38073)

## இறைவனில் இணைந்த 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 07 — 10 — 1980

ஆண்டவன் அடியில்: 19 — 08 — 1992

செல்வன்
### ரு. றஸ்கின் றோகேந்திரகுமார்
(யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்)

"இறைவனில் உறைவது ஒன்றே - உன் மனநிறைவும் மகிழ்வும் ஆகட்டும்"

இவரின் ஆன்ம சாந்தித் திருப்பலி நாளை (19-8-95) சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பேரிழப்பால் துயருறும்;
குடும்பத்தினரும், உறவினரும்.

136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

[38068]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### FOR SALE

Kirloskar Engine Water Cooled 10 H. P. Type A V2. 2 Cylinder. Contact; Samuel Sons and Co. Ltd., No 206, Hospital Road, Jaffna.
[38047]

### மலிவு விற்பனை

சமய நூல்கள், பக்தி இலக்கியங்கள், இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள் பாடசாலை உபகரணங்கள் யாவும் விற்பனையாகின்றன. ஸ்ரீ காந்த் புத்தகசாலை, நல்லூர்.
[38077]

ஓகஸ்ட் 18 தொடக்கம் மருத்துவ, விஞ்ஞான (E.L.B S) நூல்களுக்கும் இலக்கிய, சிறுவர் நூல்களுக்கும் 10—20 சதவீதக் கழிவு வழங்கப்படும். யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
[சி-1726]

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி-1967)

### வைபவ மாலை

யாழ்ப்பாண வைபவ மாலை ஆக்கம்: முதலியார் குல. சபாநாதன் பல பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் விலை 50/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம், நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன்கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது.
[சி-2036]

### வெற்றிக்கனி -3

வெற்றிக்கனி பகுதி-3 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம் பொன் சத்திவேல் விலை ரூபா 60/- விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம், நல்லூர். உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன் கோவில் அருகில் திறக்கப்பட்டுள்ளது.
(சி-2037)

### மணமக்கள் தேவை

கனடாவை விரும்பும் செவ்வாய்க் குற்றமுள்ள 28, 26 வயது பெண்களுக்கும், கனடாவால் வந்த 30, 37 வயது மணமகன்மாருக்கும், குற்றமற்ற 32 வயது ஆசிரியைக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.
(38079)

### யாழ். கோட்டை

யாழ்ப்பாணம் கோட்டையின் எழுச்சியையும் வீழ்ச்சியையும்விளக்கும் வரலாற்று ஆவணம் களம் பல கண்ட யாழ்—கோட்டை, அறிமுக விலை ரூபா 60/- நல்லூர் ஆலய வீதியில் உள்ள பூபாலசிங்கம், ஸ்ரீகாந், தமிழ்த்தாய் புத்தக சாலைகள்.
(37995)

### பொருளியல்

பொருளியல் 6 விடயங்கள், கேள்வி கோட்பாடு. நிரம்பல் கோட்பாடு, நெகிழ்ச்சி கோட்பாடு, சந்தைச் சமநிலை, உற்பத்திக் காரணிகள், வருமான வட்டப்பாச்சல். ஆக்கம்: எம். ஐ. ஜாபிர், விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.
(சி-1998)

### மணப்பெண்கள் தேவை

34 வயது, அமெரிக்கா M. S. C., 34 வயது A.G.A. மணமக்களுக்கு படித்த மணப்பெண்கள் உடனடியாக தேவை. எம்மிடம் சகல மதங்களிலும் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமண சேவை மல்லாகம், 178, பிறவுண் வீதிச் சந்தி. நாவலர் வீதி. (விலங்கு வேளாண்மை முன்பாக) யாழ்ப்பாணம்.
(38049)

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios T. V. Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. [C-1976]

### வகுப்புக்கள்

யாழ். நகரின் பிரபல தனியார் கல்வி நிலைய ஆசிரியரினால் க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு இந்து நாகரிகம், இந்துசமயம், தமிழ் ஆகிய பாடங்கள் தனியாகவோ, சிறு குழுக்களாகவோ யாழ். நகரிற்குள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு இல. 826, மே/பா உதயன் யாழ்ப்பாணம்.
(38075)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் (உபதபால் கந்தோர் ஒழுங்கை) இரண்டு பரப்புக் காணிக்குள் மூன்று அறைகளும் சகல வசதியும் கொண்ட கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்;

ந. ஆலாலசுந்தரம்,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(88060)

## ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தின் 3 ஆவது இலவச மருத்துவ சேவை

காலம்: 20 - 08 - 1995 ஞாயிறு காலை 8 முதல் முற்பகல் 11 மணி வரை
இடம்: அப்பன் சைா வித்தியாலயம்
மருத்துவம்: டாக்டர் ஈ. யோகேஸ்வரதேவன்

✶ சகலரும் பயன் பெறவும். ✶

— செயலாளர்.

ஸ்ரீராமகிருஷ்ண
சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை
(சி-2068)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம், ஆவணி மாசம், 3 ஆம் நாள் (19 - 08 - 1995) சனிக்கிழமை மாலை 6-00 மணி முதல் இரவு 8-00 மணிவரையுள்ள ரோகினி நட்சத்திரமும், தசமி திதியும், அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**ரவீந்திரன்**<br>(கனடா)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சாந்தினி**<br>(கனடா)<br>அவர்களுக்கும் |

திருவருள் துணையுடன் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, கனடாவில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

திருமண மண்டபம்:
St. Colomba Anglican Church Hall, 2723 St. Clair Ave. E., East York Ont. (at O'Connor)

திரு. திருமதி சோமசுந்தரம்,
கனபூமி, காவரநகர்.

திரு. சி. சோமசுந்தரம்
ஊராவில், காங்கேசன்துறை.

(இருவீட்டார் அழைப்பு)
[38071]

## 41-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

### வேலுப்பிள்ளை நடனேஸ்வரன்

(யாழ். இந்துக்கல்லூரி மாணவன்)

தோற்றம்: 21 — 10 — 1976
மறைவு: 09 — 07 — 1995

அறிவெனும் சுடர்விளக்கே!
அன்பின் திருவுருவமே!!
வானில் ஊர்ந்துவந்த
வல்லூறு கக்கிய குண்டால்
எம்மை விட்டு மீளாத்துயிலில்
ஆழ்ந்து கொண்ட தீபமே!!!

உன் பிரிவால் வாடும்;
தாய், அண்ணன்மார், அக்கா,
அண்ணிமார், மச்சான்,
பெறாமக்கள், மருமக்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
[38065]

## றோயல் இன்டஸ்றீஸ்

ஸ்தாபனத்தாரின்
உற்பத்திப் பொருள்கள் அனைத்தும்
தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ள

## சிவா நறுமணப் பூங்கா

உங்களை அழைக்கின்றது - - - - - - - -

- ★ றோயல் றோஸ் டல்கம் பவுடர்
- ★ தீபா றோஸ் டல்கம் பவுடர்
- ★ றோயல் பேக்கிங் பவுடர்
- ★ றோயல் ஆறோறூட் பவுடர்
- ★ றோயல் ஐசிங்சுகர்
- ★ றோயல் நீலம்
- ★ மற்றும் மென்பானத் தாயரிப்புப் பொருட்கள்
- ★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
- ★ பேக்கரிக்குரிய அனைத்துப் பொருள்கள்
- ★ பிஸ்கட், ரொபி, நெய் வகைகள்
- ★ டல்கம் பவுடர் (சொபி)
- ★ தேங்காய்த் துருவல் உலர்த்தியது
- ★ சிற்றஸிகோ எமல்சன் மற்றும் பலவற்றிற்கும்

நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## சிவா நறுமணப் பூங்கா

288, கேணல் கிட்டு சாலை,
(ஆஸ்பத்திரி வீதி)
யாழ்ப்பாணம்.
(சி-2062)

## பதுங்கு குழி அமைப்பதற்கான வேண்டுகோள்

சகல அங்கத்தவரையும் பதுங்கு குழி அமைப்பதற்கு தங்கள் பங்களிப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: நவாலி புனித பேதுரு தேவாலயம்
காலம்: 19-08-95 காலை 10.00 மணி

நன்றி:
வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மு. சி. சண்முகராசா
செயலாளர்.
(சி-2067)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## அம்பாறைத் தமிழ் மக்கள்

அம்பாறை மாவட்டத்தில், சம்மாந்துறைப் பிரதேசத்தில் உள்ள நாலாம் கொலனி எனப்படும் தமிழர் கிராமத்தில் இனத் தாக்குதல் ஒன்று நடைபெற்றிருக்கிறது. ஊர்காவற் படையினர் என்று கருதப்படுவோர் தமிழர்கள் மீது நடத்திய இத்தாக்குதலில் இரண்டு தமிழ் மக்கள் கொலையுண்டனர்; எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன; அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெல்மூடைகள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாக்கப் பட்டன.

நாலாம் கொலனி வாழ் தமிழ் மக்கள் 1990ஆம் ஆண்டிலும், முஸ்லிம், சிங்கள குண்டர்கள் நடத்திய தாக்குதலுக்கு அஞ்சி இடம் பெயர்ந்து சென்றவர்கள். அப்போதும் உயிர் உடைமைச் சேதங்களைச் சந்தித்து நொந்து போனவர்கள். சென்ற வருடமே மீண்டும் தமது கிராமத்துக்கு வந்து மீளக் குடியமர்ந்தவர்கள்.

சம்மாந்துறை முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம். அம்பாறையோ மூவின மக்களும் வாழும் மாவட்டம். ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவத்தின்போது, தமிழர்களும் எதிர்த்தாக்குதல் நடத்தியிருப்பின் இனத் தாக்குதல் இனக்குழப்பமாக உருவெடுத்திருக்கும். அது கிழக்கு முழுவதிலும் பெரும் இனக்கலவரத்தை மூட்டியிருக்கும்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிட்டு, இரு தரப்பிலும் அழிவை உண்டாக்குவதற்காக நாலாம் கொலனியை ஓர் ஆரம்பக் களமாக்கும் நோக்குடன், அரசபடைகளே— அரசாங்கமே— இச்சம்பவத்தைத் திட்டமிட்டிருக்கலாம்.

இரண்டு ஊர்காவல்படையினர் கட்டுக்கொலைப்பட்டனர் என்ற சம்பவத்தைக் காரணம் காட்டி, தமிழ் மக்களைத் தாக்கி விரட்டும் செயல் சந்தர்ப்பவசமாக நடந்த ஒன்றல்ல. நிச்சயமாகத் திட்டமிட்டுச் செய்யப் பட்டதே!

இரண்டு இனங்களையும் மோதவிட்டு, அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர்களை ஒழித்துவிட, விரட்டிவிட இப்படியொரு உத்தி கையாளப்பட்டிருக்கலாம் அல்லவா?

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளை வெட்டி எடுத்து, அரிந்து எடுத்து, வடக்கு — கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளது தெரிந்ததே. தமிழர்களை அம்பாறையில் இருந்து விரட்டி விட்டால் அந்த யோசனையை நடைமுறைப்படுத்துவது இலகு என்று அது நினைத்திருக்கலாம்!

அம்பாறைத் தொகுதியை வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இருந்து நீக்கி விடுவதற்கு யோசனை தெரிவித்த— அம்பாறைத் தமிழர்களை தமிழர்களாகக் கருதாமல் செயற்பட்ட — கூட்டணித் தலைவர்களின் அப்புகாத்து முனைவின் விளைவு இது!

# பிரிவினைக்கு வழி வகுக்குமானால் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்போம்!

## ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 18

அரசாங்கம் முன் வைத்துள்ள தீர்வு யோசனைகள் சட்டமூல வடிவில் வந்த பின்னரே நாங்கள் எமது நிலைப்பாட்டை வெளியிடுவோம்.

— எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கலுக்கு எமது ஆதரவு உண்டு. ஆனால் இப்போதோ எதிர் காலத்திலோ நாடு பிரிய வழி வகுக்கும் எந்த யோசனைக்கும் ஐ. தே. க. ஆதரவு தர மாட்டாது.

அரசாங்கத்தின் யோசனைகள் இன்னும் ஆலோசனை மட்டத்திலேயே உள்ளன. இந்த யோசனைகள் சட்டமாக்கப்படும் போது தான் அதன் விளைவுகள் தெரியும்.

ஆகவே இந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்ட சட்ட மூலம் எங்களுக்குக் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

— இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்தார். [ஐ]

## 3 கைதிகள் தப்பியோட்டம்

நீர்கொழும்பு விளக்க மறியல் சாலையில் இருந்து மூன்று கைதிகள் கடந்த செவ்வாயன்று தப்பி ஓடிவிட்டனர்.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் பிரஜையும் வேறு இரு கைதிகளுமே சுவர் ஏறித் தப்பிவிட்டனர். (ஐ)

# முஸ்லிம்கள் இரவில் வீட்டில் தங்க முடியாது

## படையினர் தடை விதிப்பு

கொழும்பு, ஓக. 18

திருகோணமலை, குச்சவெளியில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் தங்க படையினர் தடை விதித்துள்ளனர்.

அண்மையில் குச்சவெளியில் கிராமத்தில் அடுத்தடுத்து நடந்த சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் இருந்து சிங்கள, தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர்.

முஸ்லிம் குடும்பங்கள் மட்டுமே அங்கு வாழ்ந்து வருகின்றன.

மாலையானதும் அந்தக் குடும்பங்கள் இராணுவத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வேறு ஒரு பகுதிக்கு செல்ல வேண்டும் என்று பணிக்கப் பட்டுள்ளதாகவும் —

குழந்தை, குட்டிகளுடன் சென்று அவர்கள் படையினர் ஒதுக்கிய பகுதிகளில் இரவைக் கழிப்பதாகவும்— தெரியவந்தது. (இ-3)

# ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம்

கொழும்பு, ஓக. 18

ஹட்டன் நஷனல் வங்கி, அதன் ஊழியர்கள் இளைப்பாறிய பின் அவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்க முடிவு செய்துள்ளது.

இதுவரை காலமும் ஊழியர்கள் இளைப்பாறும் வேளையில், ஊழியர் சேமலாப நிதியும் ஊழியர் நம்பிக்கை நிதியுமே இவர்களுக்கு வழங்கப்பட்டது.

இப் புதிய திட்டத்தின்படி ஊழியர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 72 வீதத்தை அவர்கள் இளைப்பாறிய பின் மாதாந்த ஓய்வூதியமாக பெற்றுக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட ஊழியர் இறந்தால், அந்த ஓய்வூதியத்தை அவரது வாழ்க்கைத் துணைவியும் [கணவன் அல்லது மனைவி] 18 வயது வரை அவரது பிள்ளைகளும் பெற உரித்துடையவர்களாவர்.

அந்த ஊழியர் சேவையில் இருக்கும் போது இறந்தால், அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் 95 வீதம் அவரது குடும்பத்தினருக்கு ஓய்வூதியமாக அளிக்கப்படும்.

# ஆஸ்பத்திரி ஊழியரின் மருந்து கையாடல் அம்பலம்

யாழ்ப்பாணம், ஓக. 18

பொது வைத்தியசாலை ஆண் தாதி உத்தியோகத்தர் ஒருவர் ஆஸ்பத்திரியில் இருந்து மருந்து வகைகளைக் களவாடி தனியார் மருந்தகத்துக்கு விற்பனை செய்து வந்ததை தமிழீழ சுகாதார சேவைகளின் மருந்து ஆய்வாளர் குழு கண்டு பிடித்துள்ளது.

—இது தொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகளின் பொறுப்பாளர் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஆங்கில மருந்தகம் ஒன்றை தமிழீழ சுகாதார சேவைகளின் சிரேஷ்ட உணவு மருந்து ஆய்வாளர் தலைமையில் சென்ற மருந்து ஆய்வாளர் குழு, இரண்டு மாதங்களுக்கு முன்னர் திடீர்பரிசோதனை செய்தது.

அங்கு பல வகையான காலாவதியான மருந்து வகைகளைக் கைப்பற்றியதோடு, பாவனைக்கு உதவாத, அரச முத்திரையிட்ட 83 ஊசி மருந்துவகைகளையும் பறிமுதல் செய்தனர்.

தீவிர விசாரணையின் பின்னர் அவற்றையும் வேறு ஊசி மருந்து வகைகளையும், ஒரு வருட காலமாகக் களவாடிய பொது வைத்தியசாலை ஆண் தாதி உத்தியோகத்தர் ஒருவர் பல தடவைகளில் அவற்றை 10 ஆயிரம் ரூபாவுக்கு யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகம் ஒன்றிற்கு விற்பனை செய்தமை அம்பலமாகியது.

இவற்றை மலிந்த விலையில் இன்னொரு ஆங்கில மருந்தக உரிமையாளர் கொள்வனவு செய்து பல மருந்தகங்களுக்கு விற்பனை செய்தமை விசாரணையில் மேலும் தெரிய வந்துள்ளது.

தென்மராட்சியில் பறிமுதல் செய்யப்பட்ட மருந்தக உரிமையாளர் ஓர் சுதேச வைத்திய பட்டம் பெற்ற மருத்துவர் ஆவார். இவர் மருந்தகத்துடன், சிகிச்சை நிலையம் ஒன்றையும் நடத்தி வருகின்றார். இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டு குற்றப்பணமும் விதிக்கப் பட்டது.

தமிழீழத்தின் பொது வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் களவாடும் சமூக விரோதச் செயலை முற்றாக ஒழிக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யாழ்ப்பாணம், ஓக. 18

யெகோவாவின் சாட்சிகளின் தமிழ் மாவட்டமாநாடு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிறு வரை சாவகச்சேரியில், பேரம்பலம் வீதி, பெரியமாவடியில் அமைந்துள்ள இராஜ்யமண்டபத்தில் நடைபெறும்.

இன்று காலை 9-40 இக்கும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் காலை 9-30க்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் [ஓ]

# தீர்வு யோசனை பிரதியை புலிகளுக்கு அனுப்புங்கள்!

## தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, ஓக. 18

இனப் பிரச்சினைக்கான அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகள் அடங்கிய பிரதி ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உத்தியோக பூர்வமாக அனுப்ப வேண்டும் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கருத்தரங்கு ஒன்றை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்திய போது அவர் இவ்வாறு கூறினார். (ஓ-க)

## மாகோ தமிழ் இளைஞர் கைதானார்

கொழும்பு, ஓக. 18

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், மாகோவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை நிக்கரவெட்டி பொலீஸார் கைது செய்துள்ளனர்.

செல்வம் என்றழைக்கப்படும் பரமானந்தன் சிறினிவாசு (வயது 28) என்பவரே கைதானவராவார். இவர் தற்போது, கொழும்பு விசேட பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். [ஓ-எ]

## புதுவித காய்ச்சல்

தென்மராட்சி, ஓக. 18

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் புதுவகையான காய்ச்சல் ஒன்று வேகமாகப் பரவி வருகிறது.

தடிமன், இருமலுடன் ஆரம்பமாகும் இக் காய்ச்சல் நோயாளியை மூன்று தினங்கள் வரை தொடர்ச்சியாக தாக்கி வருகிறது.

இக் காய்ச்சலால் பாதிக்கப் பட்ட பலர் பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். [எ-117]

## தற்கொலையாளி இரு தடவை கைதானவராம்

கொழும்பு, ஓக. 18

கொழும்பிலுள்ள மேல் மாகாண முதலமைச்சர் பணிமனை வாசலில் குண்டை வெடிக்க வைத்த தற்கொலைப் படையைச் சேர்ந்தவர் ஏற்கனவே பொலீஸாரால் இரு தடவைகள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் எனப் பொலீஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். [ஓ-10]

**நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்**

## கார்த்திகை நாதா!

கார்த்திகை உற்சவம் கண்டிட நின்றோம்
காத்திடத் தமிழரை வந்திட வேண்டும்
நேர்த்திகள் ஆயிரம் உனக்குமுன் வைத்தோம்
நீசரின் கொடுமைகள் தீர்த்திட வேண்டும்
சேர்த்திடு வீரம் செருமுனை சென்று
சேனைகள் நடத்தும் தலைவனாய் நின்று
தீர்த்திடு பகையைத் திருக்கைவேல் கொண்டு
தீர்வது விரைவில் கிடைத்திட செய்வாய்!

காரை. எம். பி. அருளானந்தம்

## நல்லூரான் திருவடியைப்பாடு!

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

எடுப்பு

நல்லூரான் திருவடியை நாடு நாம்
நலம் பெற்று வாழ வென்றுபாடு நல்

தொடுப்பு

தண்முகந் தன்னில் தண்ணொளி பரப்பிடும்
சண்முகப்பிரியனின் திருப்புகழ் பாடியே நல்

முடிப்பு

தொல்லையிரு பிறவிச்சூழந்தனை நீக்கும்
வல்லவடிவேலன் என்று தான் பாடு
எல்லையிலா முறையில் அல்லல்கள் சூழுதே
நல்லைப்பதியானே காத்தருள் வாய் என்று-நல்

அமிழ்தினுமினிய தமிழ் முருகா என்றே
அனுதினம் பாடியே மகிழ்ந்திடுவோமே
கலி தொடர்காலமாய் தமிழினம் அழிவதா
நலிவடையும் நிலையைத் தடுத்திடு வேலாஎன்று-நல்

— கலைமணி பொன். தெய்வேந்திரன்

# ஏறாவூர் பொலீஸ் நிலையம் மீது புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஓக. 18

மட்டக்களப்பு ஏறாவூரில் சதாம்ஹுசேன் கிராமத்தில் உள்ள பொலீஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை நடந்த இச்சம்பவத்தில் பொலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும், ஊர்காவலர் ஒருவரும் காயம் அடைந்தனர்.

## லங்கா முடித...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பலாத்காரமாக இறக்கப்பட்ட சம்பவத்தையடுத்தும்—

தமது அமைப்புக்குத் தெரியாமல் அக்கப்பலில் சில பொருள்கள் எடுத்து வரப்பட்டமையாலும் —

இக்கப்பலுக்கு பாதுகாப்பு வழங்க செஞ்சிலுவையினர் மறுத்திருக்கலாம் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பு இன்றி நேற்று முன்தினம் புறப்பட்ட இக்கப்பல் வடக்கு நோக்கி வருவதாக நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செஞ்சிலுவையினரின் முடிவை அடுத்து —

கொழும்புத் துறைமுகத்தில் பொருள்களுடன் நிற்கும் ''லங்கா கல்யாணி'', ''மாஹோர'' ஆகிய இருகப்பல்களும் உடனடியாக வடக்கு நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குடாநாட்டு மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் ''லங்கா கல்யாணி'' கப்பலும்—

ஆறாயிரத்து 900 பரல் மண்ணெண்ணெய் மற்றும் திணைக்களங்களுக்கு தேவையான எரிபொருள் ஆகியவற்றுடன் ''மாஹோர'' கப்பலும் கொழும்புத் துறைமுகத்தில் தங்கியுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் முடிவை அடுத்து—

திருகோணமலையில் இருந்து மாவை எடுத்து வர யாழ். செயலகம் அவசர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கொழும்பில் தற்சமயம் தரித்துள்ள ''ஹெற்தல'' கப்பலை இதற்காக உடன் திருகோணமலைக்கு அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாவை ஏற்றி வரும் பணியில் ஈடுபட்டிருந்த ''ஹபரண'' கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தனதுமனிதாபிமானப் பணி நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு அமர்த்தியுள்ளதை அடுத்து—

மா எடுத்து வரும் பணிக்காக பெறப்பட்டுள்ள ''ஹெந்தல'' கப்பலுக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்க இணங்கியுள்ளது.

பாண் உற்பத்தி செய்வதற்கு தேவையான மா மற்றும் சீனி ஆகியவற்றின் கையிருப்பும் இன்றுடன் முடிவதாக செயலக திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே. (உ-3-4)


பேரரசி வண்ணச்சோலை

[மகாராணி]

வழங்கும்

உற்சவகால

மலிவு விற்பனை

★ சிவறஞ்சினி ஆர்ட்சில்க்

★ வோயில்சாறி வகைகள் [தரமானது]

இன்னும் பல —

கையிருப்பு தீரும் முன் முந்துங்கள்

பேரரசி வண்ணச்சோலை

(மகாராணி)

யாழ்ப்பாணம்

[சி/2072]


## மரண அறிவித்தல்

### வெலிச்சோர் வாமதேவன் (கிளி)

கொழும்புத்துறையைச் சேர்ந்த வாமதேவன் [கிளி] 14-08-95 அன்று பிரான்சில் அகாலமரணமானார்.

இவர் மங்களாவின் அன்புக் கணவரும், [காலஞ்சென்ற வெலிச்சோர் - கனகம்மாவின் அன்பு மகனும், இராசேந்திரம், மனோகரன், தனபாக்கியம், காலஞ்சென்ற செல்லம் ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்,

நல்லடக்கம் பிரான்சில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வெ. இராசேந்திரம்,
(சகோதரன்)

இல. 363, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம் (38083)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அஷ்ரப்புக்கு எதிராக புதிய கட்சி உதயம்

## தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம்

கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி என்ற புதியகட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்சியை தேர்தல் ஆணையாளர் நேற்று அங்கீகரித்துள்ளார்.

இக்கட்சிக்கு சின்னமாக தராசு வழங்கப்பட்டுள்ளது.

நிஸாம் ரஸாக் என்பவரை தலைவராகக் கொண்ட இக்கட்சியின் செயலாளராக ஜவாட் மரைக்கர் பதவி வகிக்கிறார்.

அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸுக்கு போட்டியாகவே புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. [இ-3-6]

## வடபகுதிக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் மாவட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென யாழ். அரச அதிபரின் பெயரில் ''லங்கா முடித'' என்ற கப்பலில் வந்த 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் உணவுப்பொருள்களில் ஒருபகுதியை காங்கேசன்துறையில் வைத்து கடற்படையினர் கடந்தமாதம் 14 ஆம் திகதி பலாத்காரமாக இறக்கியதை யடுத்து —

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக புதிய உடன்பாடு ஒன்றைக் காணும்வரை கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு நிறுத்தியிருந்தது.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகள், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு என மூன்று தரப்பும் சேர்ந்து புதிய முத்தரப்பு உடன்பாடு ஒன்றைக் காணவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அத்தகையதோர் உடன்பாடு தொடர்பாக இணக்கம் ஏற்படுவதில் இழுபறி நிலை நிலவிவந்ததை அடுத்து—

முன்னர் நடை முறையில் இருந்தவாறு கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியை மீண்டும் மேற்கொள்வதென நேற்று செஞ்சிலுவையினர் முடிவு செய்துள்ளனர்.

புதிய உடன்பாடு ஒன்றைக் காண்பது தொடர்பாக தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறும் என்றும்—

தற்போது எடுக்கப்பட்டுள்ள தற்காலிக முடிவு மறு அறிவித்தல் வரை தொடரும் என்றும்—

அதற்கிடையில் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் நடைமுறைப் பிரச்சினை ஏதும் எழுமானால் உடன் அந்தப்பணி நிறுத்தப்படும் என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு எடுத்துள்ள இந்த முடிவு ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குடா நாட்டுக்கான கப்பல் சேவை சில தினங்களில் மீண்டும் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. [உ-3-4]

## வடமராட்சி கடலில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் இத்தாக்குதலை நடத்தினர்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி, பருத்தித்துறை இறங்குதுறை ஆகிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்களை நோக்கி, சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனையடுத்து மீனவர்கள் பலரும் கடலுக்குள் குதித்து நீந்திக்கரை சேர்ந்தனர்.

நீந்தி வந்த மீனவர்களில் ஒருவரான தொண்டமானாறிலிருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டி குடியேற்றத்தில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செ. ஞானேஸ்வரன் (36 வயது) கரை சேரவில்லை.

களைத்து நீந்த முடியாது தத்தளித்துக் கொண்டிருந்த இவர் கடற்படையினரின் வேட்டுக்குப் பலியாகியிருக்கலாம் அல்லது அவர்களால் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கடற்படையினரின் தாக்குதலால் கால் ஒன்றை இழந்த அங்கவீனரான பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான விநாசித்தம்பி நடராஜசிங்கம் (40 வயது) நீந்தமுடியாது தாம் சென்ற படகுக்குள்ளேயே படுத்துவிட்டார்.

இவர் சென்ற படகு மீதும், இவர் மீதும் வேட்டுக்களைத் தீர்த்த கடற்படையினர் அப்படகை கடலுக்குள் மூழ்கடித்தனர்.

கடற்படையினர் சென்றதும் மீனவர்கள் தேடுதல் நடத்திய போது அவர் சென்றபடகிலிருந்த வலை கடலில் மிதந்து கொண்டிருந்தது. அவ்வலையில் உடல் தசைத் துண்டங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

இவருடன் சென்ற மற்றைய மீனவர் ஒருவாறு நீந்திக்கரை சேர்ந்தார்.

கடற்படையினர் வேட்டுக்களால் உடல் சிதறிப்பலியான இவர் 1988 இல் பருத்தித்துறையில் படையினரின் கண்ணிவெடிக்கு இலக்காகி ஒருகாலை இழந்திருந்தார்.

இதன் பின்பு 1992 இல் இதே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு 1993 இல் விடுதலையாகியிருந்தார். (இ-155-173)

## வெளியார்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில்லை. போர் மட்டுமே தொடரும் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

அமைதித் திட்டம் குறித்து பரவலான கருத்து வேறுபாடுகள் நிலவியபோதும் புலிகளுடன் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்பது இலங்கை இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கையாக அமையும்.

இனி புலிகள் — இலங்கை அரசு என்ற வார்த்தைகள் அடுத்தடுத்து இடம்பெற்றால் அது போர் நடவடிக்கை பற்றிய செய்தியாக இருக்குமே அன்றி பேச்சுவார்த்தை அல்லது அமைதி முயற்சி பற்றிய செய்தியாக இருக்கப்போவதில்லை என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (இ-3-6)

## தேர்தல் நடக்காது என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் விரைவில் பொதுத்தேர்தல் நடக்கும் என்று வெளியிடப்படும் ஊகத்தை நீதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் நேற்று நிராகரித்தார். [இ-3]

## கைதிகள் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

சிறையில் இருந்து தப்புவதற்கு சுரங்கப்பாதையை அமைக்க தேவையான ஆயுதங்களை அந்த சிறை முகாமின் ஒருபகுதியில் இருந்த பெண் கைதிகளே வழங்கினர் என்றும்—

ஆண் — பெண் கைதிகள் சிறைக் கூடங்களுக்கு இடையில் உள்ள[கலங்கிய உள்ள துவாரம் மூலமே அந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகவும்—பி.பி.ஸி. தனது கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளது. [இ-3]


அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழத்தின் தற்சார்பு பொருண்மியத்தை
நோக்கிய நகர்வின் ஒரு வெட்டுமுகத்தினை
தரிசித்திட
நல்லூருக்கு வாருங்கள்.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன
பொருண்மியக் கண்காட்சியை
தவறாது பாருங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

[சி/2064]